தமிழ்

இலக்கண வினாவிடை

தரம் : 12 எழுத்தியல்

01. உயிர் எழுத்துக்களில் எவற்றுக்கு எவை இனவெழுத்தாகக் கூறப்படுகிறது?

அ – ஆ இ - ஈ உ – ஊ

எ – ஏ ஒ – ஓ ஐ - இ

ஔ - உ

02. இதழ் குவிந்த உயிர் எழுத்துக்கள் எவை?

உ, ஊ, ஒ, ஓ, ஔ

03. இதழ் குவியா உயிர் எழுத்துக்கள் எவை?

அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ

04. முன் உயிர் எழுத்துக்கள் எவை?

இ, ஈ, எ, ஏ

05. பின் உயிர் எழுத்துக்கள் எவை?

உ, ஊ, ஒ, ஓ

06. இடை உயிர் எழுத்துக்கள் எவை?

அ, ஆ

07. மேல் உயிர் எழுத்துக்கள் எவை?

இ, ஈ, உ, ஊ

08. கீழ் உயிர் எழுத்துக்கள் எவை?

அ, ஆ

09. நடு உயிர் எழுத்துக்கள் எவை?

எ, ஏ, ஒ, ஓ

10. உயிர் எழுத்துக்களில் ஒலி வேறுபாடுடைய எழுத்துக்கள் எவை?

இ, ஈ, எ, ஏ, உ

11. சொற்களில் உகரம் இதழ் குவிந்த உகரமாக உச்சரிக்கப்படுவதை எவ்வாறு அழைப்பர்?

முற்றியல் உகரம்

12. சொற்களில் உகரம் இதழ் குவியாத உகரமாக உச்சரிக்கப்படுவதை எவ்வாறு அழைப்பர்?

குற்றியலுகரம்

13. மெய் எழுத்துக்களை வேறு எவ்வாறு அழைப்பார்?

உடல் எழுத்துக்கள், ஒற்று எழுத்துக்கள், புள்ளி எழுத்துக்கள்

14. மெய் எழுத்துக்களை எவ்வாறு பாகுபடுத்தலாம்?

வல்லினம்

மெல்லினம்

இடையினம்

15. மெய் எழுத்துக்களின் மாத்திரை யாது?

அரை மாத்திரை